## நகராட்சி மேல்நிலைப்பள்ளி, கடலூர் – 1

## 10-ஆம் வகுப்பு – தமிழ் - ஒரு மதிப்பெண் வினாக்கள் – பயிற்சித்தாள்-1

---

1.ஐம்பெருங்காப்பியங்களுள் பொருந்தாததைத் தேர்க.

அ) யசோதர காவியம் ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) சீவக சிந்தாமணி

2.உள்ளத்தில் கனல் மூள செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடியது எது?

அ) தேன்சிட்டு ஆ) வண்டு இ) தேனீ ஈ) வண்ணத்துப்பூச்சி

3.“அன்னை மொழியே” என்ற கவிதையில் இடம்பெறும் மூவேந்தருள் ஒருவர்

அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்

4.பொருந்தாதவற்றைக் கண்டறிக.

அ) பாவியக்கொத்து ஆ) நூறாசிரியம் இ) தென்தமிழ் ஈ) பள்ளிப்பறவைகள்

5.பொருந்தாதவற்றைக் கண்டறிக.

அ) தமிழ்ச்சிட்டு ஆ) பள்ளிப்பறவைகள் இ) எண்சுவை எண்பது ஈ) உலகியல் நூறு

6.பொருத்துக.

1. மாண்புகழ் – அ) சிலப்பதிகாரம்
2. மன்னும் – ஆ) திருக்குறள்
3. வடிவு – இ) பத்துப்பாட்டு
4. பாப்பத்தே – ஈ) மணிமேகலை

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ

இ) 1.ஆ 2.இ 3.ஈ. 4.அ ஈ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ

7.‘அன்னை மொழியே’ கவிதை இடம் பெறும் நூல்

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு இ) எண்சுவை எண்பது ஈ) பாவியக்கொத்து

8.“முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே”- என்று பாடியவர்

அ) பெருஞ்சித்திரனார் ஆ) க.சச்சிதானந்தன் இ) வாணிதாசன் ஈ) கண்ண தாசன்

LIVEWORKSHEETS

9.“முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே” – என்று பாடியவர்

அ) க.சச்சிதானந்தன் ஆ) துரை. மாணிக்கம் இ) வாணிதாசன் ஈ) முடியரசன்

10.“நற்கணக்கே” என்பதில் சுட்டப்படும் நூல்கள் எத்தனை?

அ) 18 ஆ) 10 இ) 8 ஈ) 5

LIVEWORKSHEETS